சிறுவர் கதை அமுதம் 1

சத்தியசீலனின்

# உயிருக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.5.86 PO.22




சிதம்பரதிருச்செந்திநாதன் B.Sc

காட்டிலே நுழைந்த
வேட்டை நாய் ஒன்று
புதருக்குள்ளே
தலையை விட்டது.
பதுங்கி இருந்த
குறுமுயல் ஒன்று
பயந்து வெளியே
பாய்ந்து சென்றது.
'விட்டேனு பார்'
என்று சொல்லி
வேட்டை நாயார்
விரட்டிய பொழுதும்
எப்படியோ முயல்
தப்பிக் கொண்டது.
ஓட்டப் போட்டியைப்
பார்த்த வேடன்
"உன்னிலும் முயலே
ஓட வல்லவன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தன் நாயை
ஏளனஞ் செய்தான்.
அந்த நாயோ
அவனைப் பார்த்து
"எஜமான் சொன்னது
சரிதான்; எனினும்
நான் ஓடியதோ
உணவுக்காக.
முயல் ஓடியதோ
உயிருக்காக."
என்று கூறி,
வென்றதே தம்பி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுதிய மருந்து


சிதம்பரதிருச்செந்திநாதன் B.Com

வயிற்று வலியென
வாணர் துடித்தார்.
வயித்தியர் உடனே
அழைக்கப்பட்டார்.
வந்த மருத்துவர்
பரிசோதித்தார்.
இந்தா மருந்தென
எழுதித் தந்தார்.
"எழுதித் தந்த
இந்த மருந்தை
இரவு படுக்கமுன்
எடுத்தாற் போதும்."
என்றே கூறிச்
சென்றே விட்டார்.
வாணர் மனைவியும்
வைத்தியர் சொற்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எழுதிய மருந்தை'
எடுத்துக் கொடுக்க
வாணரும் வாங்கிச்
சப்பி விழுங்கினார்!
விழுங்கிய வாணர்
விடிய எழுந்து
"நல்ல மருந்தெணை;
வலிசுகம்" என்கிறார்.

மருத்துவர் 'எழுதிய
மருந்துத் துண்டை'
மடித்துக் கொடுத்த
மனைவியும் மகிழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்காத அந்த



# ஒற்றைக் கண்!

வேலைக் கார
வெட்டி, தன் எஜமான்
இரவு படுக்கப்
போனது தொடக்கம்
அடுத்தநாட் காலை
அவர் விழித்தெழும் வரை
கையா ருமற்
காற்று விசுக்கிக்
கொண்டே நிற்கக்
கண்டோர் நண்பன்
"வெட்டி, நீ உண்மையில்
வெட்டி தானப்பா.
முட்டாளே! துரை
கண்ணை மூடியதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமாய் இருக்கும்
கதிரையில்,
இருந்த படியே
நித்திரை விருந்தை
அருந்திட லாமே.''
என்றழு தானும்!
விழுந்து விழுந்து
சிரித்த வெட்டி
“சங்கதி தெரியுமோ?
எங்கள் எஜமான்
ஒற்றைக் கண்ணுல்
உறங்கிக் கொண்டு
மற்றக் கண்ணுல்
என்னைப் பார்க்கிருர்!
துரையார் படுக்கப்
போகும் பொழுது
கழற்றி வைத்திடும்
அந்தக் கண்ணே
கவன மாக
மேசை மீதிருந்து
இமை கொட்டாமல்
என்னையே பார்ப்பதால்,
எப்படி யப்பா
உறங்கிட முடியும்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொன்னும்!
எட தம்பியரே,
வெட்டியின் எஜமான் இரவு,
கழற்றி வைக்கும்
கண் எது தெரியுமோ?
கண்ணு டிக்கண்!
அது அவர் பொய்க்கண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிலும் பாதி



வாடி வந்த
வறிய வருக்கும்
பாடி வந்த
புலவர்க ளுக்கும்
அள்ளி அள்ளிக்
கொடுக்கின்றவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகா புரியின்
அரசரா யிருந்தார்.
வள்ளலாய் அரசர்
இருந்தும் என்னவாம்?
கொள்ளிக் கண்ணன்
என்கிற கொடியவன்
வாயிற் காவலன்,
வழியை மறித்து
அங்கு பெற்றுச்
செல்லும் பரிசிலில்
பங்கு கேட்டுப்
பாதியைப் பறிப்பான்!
எதிலும் பாதி!
இதுஅவன் நீதி.
கொள்ளிக் கண்ணனின்
கொடுமையைக் கண்டு
புலவ ரெல்லோரும்
புழுங்கினர், ஒருநாள்
அரண்மனே வந்த
ஓர் இளம்புலவன்
அற்புதமான ஓர்
பாட்டைப் பாடினன்.
மன்னனும் அந்தப்
பாட்டால் மகிழ்ந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பரிசு
வேண்டும்?" என்றனும்.
'அரசே, நூறு
கசையடி வேண்டும்.'
என்று கூவினன்
இளந்தமிழ்ப் புலவன்.
"பரிசு தானே
கேட்டிடப் பணித்தேன்!
தண்டனை அல்லவா
தரும்படி சொல்கிறீர்!"
திணறினர் அரசர்.
திரும்பவும் புலவன்
'அரசே நூறு
கசையடி வேண்டும்.
அதிலே பாதி
ஐம்பது தானே...?
அதோ நும் வாயிற்
காவலனுக்கு, உடன்
ஐம்பது கசையடி
கொடுங்கள்.' என்றனே!
"ஏன்?" எனக் கேட்ட
அரசருக்கு, 'உண்மை
தான்' எனக் கூறிய
ஒரு முதுபுலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிக் கண்ணன்
தமக்குப் புரிந்த
கொடுமையை விளக்கிடக்
கொதித்த மன்னவன்
கூவி அழைத்தான்
வாயிற்காவலனை.
"எதிலும் பாதி
இது உன் நீதி!
அந்தக் கணக்கிலே
ஐம்பது கசையடி
நாமே உவந்து
தருகிறோம்." என்று
கொள்ளிக் கண்ணன்
குழறக்குழற
ஐம்பது கசையடி
கொடுத்துக் களைத்து
"ஊழலை ஒழித்தவர்
வாழ்கவே" என்று
பாவா ணற்குப்
பரிசு தந்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கும் மந்திரி



கோவலூர் அரசர்
குழந்தை போன்றவர்.
மந்த ரான
அந்த மன்னவர்
மந்திரி சொல்லிலே
மயங்கிக் கிடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரி யான
அந்த மந்திரி
தன்னலங் கருதியே
எதையும் செய்வான்.
உருசி யான
உணவென் ருலும்
"அதை தான் சுவைத்துப்
பார்த்துச் சொல்லுவேன்."
என்றதை உண்ண
முந்துவான் மந்திரி.
இந்த விதமாய்
எதற்கும் முந்தி
மந்திரி அரச
போகம் நுகர்ந்தான்!
இந்த விதமாய்
நாட்கள் நடக்கையில்
ஆசை கூடிய
அமைச்சன், அரசரை
மோசஞ் செய்யவும்
நினைத்து விடுகிருன்.
அரசரை இருட்டறைக்கு
அழைத்துச் செல்கிருன்.
தூக்குக் கயிறு
தொங்கியது அங்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்குத் தடக்க
மந்திரி "மன்னா,
இந்த உலகினில்
இனிமையே இல்லை.
அதோ பாருங்கள்
சந்திர லோகம்
இதற்கும் மேலே
இந்திர லோகம்
அதற்கும் மேலோர்
அந்தர லோகம்!
அந்தர லோகம்
அழகு மிக்கது,
"இந்தக் கயிற்றிலே
கழுத்தைக் கொடுத்தால்
அந்தக் கணமே
அந்தர லோகம்
காணலாம்." என்று
கரடி விடுகிறான்!
சூது இதை அறியாப்
பேதை மன்னவர்
"மேதையே நன்று
நன்று." எனக்கூறித்
தூக்கு மேடையிலே
துள்ளி ஏறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்திலே கயிற்றையும்
மாட்டப் போனவர்,
ஏதோ ஒன்றை
நினைத்தவ ராகிப்
"பாதகம் ஒன்றே
நடக்கப் பார்த்தது;
மறந்து விட்டீரா
மந்திரி யாரே?
பறந்து வாரும்."
என்று கத்தினர்.

"வருகிறேன்" என்று
குழறிக் கொண்டு
அருகுபோய் நின்ற
அமைச்சரைப் பார்த்து
எதற்கும் முந்தும்
மந்திரி யாரே
இதற்கு மட்டும்
பிந்தி விட்டீரே!
அந்தர லோகம்
எந்த விதமென
முந்திநீர் சென்று
வந்ததைச் சொல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வழியால்
அடியேன் வருகிறேன்.''
என்று கூறி
இடியாய்ச் சிரித்து
பதிலுக் காகக்
காத்திருக் காமல்
மந்திரி கழுத்திலே
கயிற்றையும் மாட்டி
இறுக்கு இறுக்கென்று
இறுக்கி விடுகிறுர்!
மறுக்க முடியுமா
மந்திரி யாலே?
இறுக்கிய கயிறு
மேலும் இறுகத்
தூக்குக் கயிற்றிலே
தொங்கிஞர் மந்திரி!
''எதற்கும் முந்தும்
மந்திரி யாரே!
இதற்கும் முந்தி
விட்டவர் நீரே.''
என்று பாடிக்
கொண்டிருந் தாராம்
கோவலூர் அரசர்
பாவமா மந்திரி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி யாருக்கு?

ஏழை ஓவியன்
எழில், அவ்வூரின்
செல்வ மகளாம்
சீதையை வரைந்தால்
நல்ல பரிசு
வரும்என நம்பி,
எண்ணிய படியே
அச்சீமாட்டியை
வண்ண ஓவியமாய்
வடித்துமே விட்டான்.

அரண்மனை போன்ற
அவள் வளமனைக்குப்
பெருமிதத்துடன், அப்
படத்துடன் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அந்தப் படத்தில்,
சீதையின் உருவம்
பாதியும் இல்லை
என்று சிலர் அதை
இகழ்ந்தனர். மறுசிலர்
நன்று நன்றெனப்
புகழ்ந்தனர். இதனால்
தீர்ப்பு வழங்கிடும்
தேவை ஏற்பட
நடுவர் யார் எனவும்
அடிபட் டார்களாம்!
பொடியர் எனப்படும்
புத்திமான் எழுந்து
"நமது தீர்ப்போ
நடுநிலையற்றது.
நாயின் தீர்ப்பே
நன்று." என்றார்களாம்!
தாயைப் போன்ற
சீதையார் எழுந்து,
"ஓவியக் கலைஞரே!
எந்தன் உருவம்
படத்திலே அச்சொட்டாக
இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலே விடப்படும்
எனது நாய், அப்
படத்தினை நோக்கிப்
பாய்ந்து வந்திடும்;
வாலை ஆட்டிடும்;
காலை நக்கிடும்;
பாலைப் பழம்போற்
பரிசும் இட்டிடும்.
இன்றுபோய், நாளை
வாரும்." என்றுளாம்.
அறிவு மிக்க
வறிய ஓவியன்
பொறுமையுடன் போய்
மீண்டும் அப்படத்தைப்
'போட்டிக் குரியதாய்ப்
புதுக்கி' வைத்தே
அடுத்தநாள் அதனை
எடுத்துச் சென்றான்.
சீதை மனையிலே
இருந்த மேதையர்
படத்தினை வைத்து,
இடத்திலே சீதை
வளர்த்த நாயை
அவிழ்த்து விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தை நோக்கிப்
பாய்ந்த நாயோ
வாலை யாட்டியும்
வளைய வந்தும்



பலமுறை
படத்தை
மோப்பம்
பிடித்தபின்,
நாவால்
அதனை
நக்கவுந்
தொடங்க
'ஓவியம்
இதிலே
உயிர் உண்டு'
என்று
யாவரும்
மொழிந்து
பரிசும்
தந்தனர்!

ஆயினும் அந்த
ஓவியன் தனக்குள்
"பன்றிக் கொழுப்பே
நன்றி" என்றனன்!
பரிசு பெற்றது
பன்றிக் கொழுப்பே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு

வாரமலருக்கு

நன்றி கூறிக்கொண்டு

தொடர்ந்து

வெளியான

ஆறு

சிறுவர் கதைகளையும்

இவ்வண்ண

மலர்ச் செண்டாக்கி,

சிறுவருக்கென

வழங்குகிறோம்.

— வெளியீட்டாளர்.

# UYIRUKKAKA

## A Collection of Children's Stories in Verse

*Author* :

*Pandit* **P. SATHIASEELAN**, B. A. (Hons.)



*Illustrations* : **RAMANI**

*Publisher* : **MRS. S. KALADEVI**
'Kalai Vannam',
Sinnappah Lane,
Navaly South,
MANIPAY.

14 - 01 - 86 Price : Rs. 5-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org